24th September 1958]

SRI S. LAZAR : திட்டப்படி எத்தனை கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டிருக்க வேண்டும் ? அது பூர்த்தியாகிவிட்டதா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்தக் குறிப்பிட்ட லிஸ்டத்தைப் பற்றிச் சொல்ல முடியாது. பொதுவாக, போட்டிருக்கும் திட்டங்களுக்கு அதிகமாகவே விஸ்தரிப்பு நடந்துகொண்டு வருகிறது.

SRI J. MATHA GOWDER : மரத்தை நட்டவனுக்கு பழம் கிடைக்காமல் இருப்பது போல, நீலகிரி ஜில்லாவிலே மின்சார உற்பத்தி செய்தும் அந்த ஜில்லாவின் தேவையைப் பூர்த்தி செய்யாமல் இதர ஜில்லாக்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே முதலில் நீலகிரி ஜில்லாவுக்குக் கொடுத்துவிட்டு, பிறகு மற்ற ஜில்லாக்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த மின்சார விஸ்தரிப்பைப் பொறுத்தவரையில் நீலகிரி ஜில்லாவிலே பல கோடி ரூபாய் செலவழித்து வருகிறோம். அந்த ஜில்லாவிலுள்ள தேவையையும் மனதில் கொண்டு, கனம் அங்கத்தினருடைய ஆசையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தான் இன்றைக்கு விஸ்தரிப்பு நடந்துகொண்டு வருகிறது.

Madurai Municipality

* 480 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to upgrade the Madurai Municipality into a Corporation? 9-30 a.m.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : No, Sir.

SRI A. A. RASHEED : In view of the importance of Madurai as the capital of Pandya Nad, will the Government reconsider their decision?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : At present we are not treating it as Pandya Nad, and we are not treating Madurai as the caiptal of Pandya Nad. We will give it due consideration.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : மதுரை முனிசிபாலிடியை கார்ப்பரேஷன் ஆக்குவதற்கு என்ன தகுதி இருக்க வேண்டுமோ அந்தத் தகுதி இல்லை என்று சர்க்கார் நினைக்கிறதா ? ஏன் அதைக் கார்ப்பரேஷன் ஆக்குவதற்கு முன் வரவில்லை ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : பொருளாதார நிலை தகுதியில்லை என்றுதான் அரசாங்கம் கருதுகின்றது.

SRI K. VINAYAKAM : Sir, what are the standards or tests which a municipality has got to fulfil before it becomes entitled to conversion into a corporation?

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI V. K. KOTHANDARAMAN : ஒரு கார்பரேஷன் ஏற்படுத்த வேண்டுமென்றால் எவ்வளவு ஜனத்தொகை ? (சிரிப்பு.)

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஆங்கிலத்தில் கேட்டதை தாங்கள் தமிழில் கேட்கிறீர்கள். (சிரிப்பு.)